# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 43/2017 | **CNR No.** | : | TNKI13-001235-2017 |
| **Name** | : | வெங்கடாசலம் | தந்தை பெயர் | : | லேட். கிருஷ்ணன் |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 52 | **Village** | : | குட்லானூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 01:15PM | **End Time** | : | 01:50PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 21.03.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு கையொப்பம் போடும் பழக்கம் என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் ஓரளவு படிப்பேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வண்டி வழி பாதைக்காக தாக்கல் செய்துள்ளேன். எண்ணிடம் காட்டப்படும் **வா.சா.ஆ 1** ஆவணத்தில் பிதுராஜியமாய் பாத்தியப்பட்ட சொத்து எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் குட்லானூர் கிராமத்தில் குடியிருக்கிறேன். கோவிந்தன் மற்றும் மாயக்கண்ணன் ஆகியோர் குட்லானூர் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது வீடும் அவர்களது வீடும் அருகருகே உள்ளதா என்றால் இல்லை, நிலங்கள் மட்டும் அருகருகே உள்ளன. நான் எத்தனை ஆண்டுகளாக மேற்படி

கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததில் இருந்து அங்கு தான் குடியிருந்து வருகிறேன், எனக்கு விவரம் தெரிந்து 4ன்கு தலைமுறையாக அங்கு தான் உள்ளோம். 1ம் பிரதிவாதி கோவிந்தனும் அதே கிராமத்தில் தான் பூர்விகமாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். குட்லானூர் சிறிய கிராமம் என்றால் சரிதான், மொத்தம் 50 குடும்பங்கள் இருக்கும் என்றால் சரிதான்.

(2) சிறிய கிராமம் என்பதால் அங்கு உள்ளவர்களை பற்றி மற்றவர்களுக்கு நல்ல விவரம் தெரியும் என்றால் சரிதான். கோவிந்தனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ரமேஷ் என்ற ஒரு மகன் உள்ளார், மற்றவர்கள் பற்றி தெரியாது. வழக்கின் 2ம் பிரதிவாதி சரஸ்வதி யார் என்றால் எனக்கு தெரியாது. இன்றளவும் சரஸ்வதி யார் என்று எனக்கு தெரியாதா என்றால் தெரியாது, சுமார் 20 வருடங்களுக்கு முன்பே திருமணம் செய்து கொண்டு சென்றுவிட்டதால் விவரம் தெரியாது. சரஸ்வதி 1ம் பிரதிவாதி கோவிந்தனின் மகள் என்று இன்றளவும் எனக்கு தெரியாதா என்றால் ஆமாம்.

(3) ஊத்தங்கரை சார்பு நீதிமன்றத்தில் **அசல் வழக்கு.196/2017** என்ற வழக்கு எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் நானும் மாயக்கண்ணன் தரப்பினர்கள் தான் என்றால் சரிதான். அப்போதாவது நான் 2ம் பிரதிவாதி சரஸ்வதி பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் இந்த வழக்கை முதலில் கோவிந்தனுக்கு எதிராக மட்டும் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சரஸ்வதிக்கு வழக்கு சொத்து பூர்விக சொத்து என்று மனு செய்து தான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான்.

அப்போதாவது 2ம் பிரதிவாதி சரஸ்வதி பற்றி விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் பிறகு தெரிந்துக்கொண்டேன். சரஸ்வதியின் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் ஜானகி, விமலா மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் ஆவார்கள். கோவிந்தனுக்கு 1 மகன் 3 மகள்கள் என்றால் சரிதான்.

(4) நான் வண்டி வழி கிரைய பத்திரம் வாங்கியதாக சொல்லும் **வா.சா.ஆ.1** ல் மேற்படி கோவிந்தனின் வாரிசுகள் தரப்பினராக இல்லை என்றால் சரிதான், கோவிந்தனிடம் மட்டும் தான் வாங்கினேன். 1ம் வாதி மாயக்கண்ணன் எனக்கு என்ன உறவு என்றால் தம்பி ஆவார். எண்ணிடம் காட்டப்படும் ஆவணத்தில் புகைப்படத்தில் உள்ள நபர் என் தம்பி என்றால் சரிதான். குட்லானூர் கிராமத்தில் கிருஷ்ணன் குமாரார் கே. மாயக்கண்ணன் எனக்கு தம்பி என்றால் சரிதான். நான் மாயக்கண்ணனுக்காவும் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நானும் எனது தம்பி மாயக்கண்ணனும் ஒன்றாக தான் இருக்கிறோம் என்றால் சரிதான்.

(5) எனது தம்பி மாயக்கண்ணன் என்பவர் ராஜிகிருஷ்ணன் மகன் ரமேஷ்குமார் என்பவரிடம் இருந்து வாங்கிய கிரைய பத்திரத்தின் நகல் தான் எண்ணிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான், அது அவரது தேவைக்காக வாங்கியது தான். ( **09.11.2020 தேதியிட்ட விவசாய வண்டி வழி சுத்த கியைர பத்திரம் – பதிவு நகல் – பி.வா.சா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது)** எனது தம்பி கிழமேல் வடபுறம் 7 மீட்டரும் தென்புறம் 6 மீட்டரும் தென்வடல் இருபுறமும் 10 மீட்டர் என விஸ்த்தீரணமுள்ள வழியை தான் வாங்கியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது எனது தம்பி

அவருடைய தேவைக்காக வாங்கியுள்ளார் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. இந்த வழக்கு எந்த சர்வே எண் நிலத்திற்கு செல்வதற்காக வழி என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழிக்கு மேலே உள்ள நிலம் சர்வே எண் தெரியாது. **வா.சா.ஆ.2** காண்பிக்கப்பட்டு, நான் எந்த சர்வே எண் நிலத்திற்கு செல்ல வேண்டும் என்று வழிக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் **சர்வே எண்.27/2பி 2ஏ மற்றும் 27/2பி 2பி ஆகும்**. **சர்வே எண் 27/2பி2ஏ, 27/2பி 2பி** உள்ள நிலங்கள் யாருடையது என்றால் என்னுடையது தான். **சர்வே எண்.27/2பி 2பி** க்கு அருகில் தான் ஒட்டியவாறு தென்புறத்தில் **27/2பி 2சி** உள்ளது என்றால் சரிதான். எனது தம்பி **சர்வே எண்.27/2பி2சி** ல் தான் வாங்கியுள்ளார் என்றால் சரிதான், அவர் தேவைக்காக வாங்கியுள்ளார். எனது தம்பி எந்த நிலத்திற்காக மேற்படி வழியை வாங்கியுள்ளார் என்றால் அந்த இடத்தில் போர் போடுவதற்காக வாங்கியுள்ளார்.

(6) நானும் எனது தம்பியும் **சர்வே எண். 27/2பி 2சி** தான் காலாகாலமாக சென்று வரும் வழி என்றும் வழக்கு சொத்தில் எந்த வழியும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் மரங்கள் நடப்பட்டு வளர்ந்த நிலையில் உள்ள மரங்கள் தான் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்ற ஆணையர் மூலம் நிலத்தை பார்வையிடுவதற்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் 2,3 மரங்கள் உள்ளன, ஆனால் வண்டி வழியாக தான் பயன்படுத்தி வருகிறோம். நான் சொல்லும் மரம் குறைந்தபட்சம் 7 அடி உயரம் இருக்கும் என்றால் செடிகளாக உள்ளது அளந்தால் தான் தெரியும். வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து பார்ப்பதற்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் சாட்சி அதை எப்படி

நான் சொல்ல முடியும் என்று பதில் அளிக்கிறார். நீதிமன்ற ஆணையர் வந்து பார்வையிட்டார் உண்மை நிலை தெரியவரும் என்பதால் தான் ஆட்சேபணை செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai